பொதுக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறு - A ஆண்டு

முதல் வாசகம் : எசா 58:7-10
இரண்டாம் வாசகம்: 1 கொரி 2:1-5
நற்செய்தி வாசகம்: மத் 5: 13-16

''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள் - நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்''

முன்னுரை:

கிறிஸ்துவில் அன்புநிறை சகோதர சகோதரிகளே உங்கய் அனைவருக்கும் இனியக் காலை வணக்கம். இன்றைய வழிபாட்டை நான் நம் வாழ்வின் அன்றாட சாதாரண நிகழ்வுகளிலிருந்து ஆரம்பிக்க விரும்புகிறேன்.
நீங்கள் ஒருநாள் இரவில் நேரம் சென்று உங்கள் சமையல் அறைக்குள் நுழைவதாகக் கற்பனை செய்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் அதிகப் பசியோடும், களைப்பாகவும் இருக்கிறீர்கள். எனவே பசியைப் போக்கிக் கொள்ள நீங்கள் சூப் தயாரிக்கிறீர்கள். அதை சுவைத்துப் பார்க்கும் போது அது சுவையற்றதாக உட்கொள்ள இயலாததாக உள்ளது. நீங்கள் உடனே அதில் சிறிதளவு - மிகக் குறைந்த அளவிலான உப்பை சேர்க்கிறீர்கள். இப்போது அந்த கோப்பையிலிருந்த மொத்த சூப்பும் சுவை மிக்கதாக மாறிவிடுகிறது. அது உயிரோட்டத்துடன் மணம் கமழும் ஒரு நல்ல உணவாக மாறிவிடுகிறது. அதை அவ்வாறு மாற்றம் செய்தது ஒரு துளி உப்பு என்றப் பொருளே.

அடுத்ததாக நீங்கள் ஒரு இருளடர்ந்த குறுகிய சந்தின்வழியாக நடப்பதாகக் கற்பனை செய்துக் கொள்ளுங்கள் எவ்வித வெளிச்சமோ, வானில் ஒளி வீசும் நிலவோ, விண்மீன்களோ கூட இல்லாத நேரம். நீங்கள் நடக்கும் பாதையைக கூடப்பார்க்க இயலாத ஒரு நிலை. அச்சமயத்தில் யாரோ எங்கிருந்தோ தூரத்திலிருந்து சிறியதொரு விளக்கை ஏற்றுகிறார். அது ஒரு ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சக் கூடிய பெரிய விளக்கு அல்ல. சாதாரண மிகச் சிறிய விளக்கு. ஆனால் அச்சிறிய விளக்கின் மெல்லிய ஒளியே நீங்கள் நடக்கக்கூடிய பாதைக்கு வேண்டிய ஒளியைத் தந்து நீங்கள் பத்திரமாக உங்கள் வீட்டைச் சென்றடைய உதவி செய்ய போதுமானதாக இருக்கிறது.

உப்பும் ஒளியும் மிகச் சாதாரணமானவைகளே ஆனால் அவற்றில் அடங்கியுள்ள சக்தி அபரிமிதமானது. இன்று இயேசு நம்மைப் பார்த்து ''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள் - நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்'' என்றுக் கூறுகிறார்.

எனவே இத்திருப்பலிக்குக் கூடி வந்துள்ள நாம் இயேசு நாம் எவ்வறாக இருக்க வேண்டும் செயல்பட வேண்டும் என விரும்புகிறாரோ

அவ்வாறே நம்மை மாற்றிட, நாம் நலன்களால் நிரம்பியவர்களாக விளங்கி, அதன் வாயிலாக நாம் நம்மைச் சுற்றி உள்ள மனிதரின் வாழ்விற்கு சுவையூட்டுவோராக, இருளில் இருப்போர் ஒளிக்கு வருமாறு உதவுபவர்களாக, அவர்களை இயேசுவிடம் இட்டுச் செல்லக் கூடிய பாதையைக் கண்டுணர்ந்துக கொள்ள இயலும்.

மறையுரை -- மத் 5:14-16 - உலகில் உப்பாக ஒளியாக இருக்கிறீர்கள்.

1 முன்னுரை - உப்பின் குணங்கள்

நான் இப்போது ஒரு சிறுகதையுடன் என் மறையுரையைத் துவங்கப் போகிறேன்.

நீங்கள் ஒருநாள் இரவில் நேரம் சென்று உங்கள் சமையல் அறைக்குள் நுழைவதாகக் கற்பனை செய்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் உண்பதற்காக உணவை தயாரிக்கிறீர்கள். நீங்கள் தயாரித்து வைத்துள்ள சூப்பில் சிறிதளவு - மிகக் குறைந்த அளவிலான உப்பை சேர்க்கிறீர்கள். சுவையற்றதாக உண்ணத் தகாததாக இருந்த அந்த மொத்த சூப்பும் சுவை மிக்கதாக மாறிவிடுகிறது. அது உயிரோட்டத்துடன் மணம் கமழும் ஒரு நல்ல உணவாக மாறிவிடுகிறது. சாதாரணப் பொருளாக இருந்த அந்த சூப்பு மணம் கமழும் சுவையும் ஊட்டச்சத்து நிறைந்த மிக அற்புதமான மன மகிழ்வைத் தரும் உணவாக மாறிவிடுகிறது.

இதைக் குறித்து நாம் சற்று பெரிய அளவில் சிந்தித்துப் பார்ப்போம். உப்பு என்ற ஒரு பொருளே இல்லாத உலகைக் கற்பனை செய்துப் பார்ப்போம். உணவுப் பொருள்கள் விரைவில் கெட்டுவிடும். உண்ணும் உணவே மந்த நிலைக்குள்ளாகி உற்சாகமற்றதாக, ஒட்டு மொத்த வாழ்வே உத்வேகமோ, உற்சாகமோ இல்லாததாகிவிடும். நாம் உலகில் உப்பாக இருக்க வேண்டும் என்று நம்மை அழைக்கும் இயேசு இதைக் குறித்தேப் பேசுகிறார்.

உப்பின் தன்மை பொருள்கதைக் கெடாமல் வைத்திருப்பது அது உணவின் சுவையைக் கூட்டுகிறது. அது உயிரற்றிருப்பவற்றிற்கு உயிரோட்டத்தை அளிக்கிறது. ஒரே ஒருத் துளி உப்பு எவ்வாறு பாத்திரத்தில உள்ள அனைத்து சூப்பையும் சூவையுள்ளதாக மாற்றுகிறதோ - மற்ற மக்களின் மத்தியில் வாழும் கிறிஸ்தவர்கள் தங்களிடம் உள்ள நற்குணங்களின் துணையோடு நமது வாழ்வால், நமது செயல்களால், நமது வாக்கால், நமது இறைநம்பிக்கையால், நம்மை சற்றியுள்ள மக்களின் வாழ்விகு சுவையூட்டுபவர்களாக, அவர்களது வாழ்வை பொருளுள்ளதாக மாற்ற முற்பட வேண்டும்.

2. உப்பைக் குறித்த இயேசுவின் போதனை:
மலைப்பொழிவை இயேசு இரண்டு உதாரணங்களுடன் துவங்குகிறார். நாம் இவ்வுலகில் உப்பாக இருக்க வேண்டும் என்று அழைக்கிறார்.

முற்காலத்தில் உப்பு ஒரு விலையேறப்பெற்றப் பொருளாகப் போற்றப்பட்டது. அது உணவுப் பொருள்களைப் பாதுகாத்தது. அது உணவின் சுவையை மிகுதியாக்கியது. அது பொருள்கள் கெட்டுப்போகா வணணம் பத்திரப்படுத்தியது. நாமும் அத்தகையக குணம் கொண்டோராக இவ்வுலகில் இருக்க வேண்டும் என்று இயேசு நம்மை அழைக்கிறார். நாம் நற்குணங்களை, நல்லனவற்றைப் பாதுகாப்போராக விளங்கவும், எளிதில் ஊழலும், தீயவறறினாலும எளிதில் கெட்டுப் போகும் நிலையிலிருக்கும் .இந்த சமூகத்தைக் காப்பாற்றி அதற்கு உயிரளிப்போராக இருக்க வேண்டும் என்றும் இயேசு நம்மை அழைக்கிறார்.

நாம் உப்பே சேர்க்காத ஒரு உணவை கறபனை செய்துக் கொள்வோம். அது ஒரு சுவையற்ற முழுமையடையாத உணவாகவே இருக்கும். கிறிஸ்துவரின் சான்றுபகராத வாழ்வால் இவ்வவுலகமும் இவ்வாறே சுவையற்றதாக மாறிவிடு.ம். உப்பு தன்னை மறைத்துக் கொண்டு செயலாற்றுகிறது. அது குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது. ஆயினும் அதன் செயல்பாடும் சக்தியும் பெரிது. அதெ போனறது தான் உள்ளது இவ்வுலகில் வாழும் கிறிஸ்துவர்களின் வாழ்வும். கிறிஸ்துவர்கள் நம் மததியில் வாழும மனிதர் முன் வாழும் சான்றான வாழ்வின் வழியில் பகிர்ந்துக் கொள்ளும் நமது அன்பும், உண்மைத் தன்மையும், நேர்மையும் யாரோ ஒருவரால் எற்றப்படட சிறு விளக்கின் ஒளியைப் போன்று, நமது நற்பண்புகளைப் பேணி, நம்மைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்வை செழுமையுள்ளதாக மாற்றும்.

3. ஒளியாக மாறுதல்:

இயேசு கூறுகிறார் '' நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்''

ஒரு சிறுவன் தெருவிளக்குகள் கூட இல்லாத ஒரு கிராமத்தில் ஊரில் வசித்து வந்தான். அவனது குடும்பத்தார் தங்கள் வீட்டு வாசலில் தினமும் இரவில் சிறு விளக்கு ஒனறை ஏற்றி வைப்பர். ஒரு நாளட இரவ அந்த கிராமத்திறகு வந்த ஒரு பயணி அங்கிருந்த பாதை வளைவுகள் ஒன்றில் வழி தவறி விட்டார். எங்கும் இருளே சூழ்ந்திருந்ததால் அவரால் எதையுமே பார்க்க இயலவில்லை. ஒருவழியாக அந்த சிறுவனின் வீட்டு வாசலில் வைக்கப்பட்டிருந்த விளக்கின் ஒளியைக் கண்டார். அந்த சிறிய விளக்கின் ஒளியால் அவர் அந்த சிறுவனின வீட்டிற்கு வநது சேர்ந்தாா. அவர் வந்தடைந்தப் பின் அச்சிறுவனிடம் ''இந்த சிறிய விளக்கின் ஒளி என்னை பத்திரமாக மீட்டுக் காப்பாற்றியுள்ளது'' என்றுக் கூறினார்.

ஒளி, உப்பைப் போல மறைந்திராமல் அது வெளிப்படையாகத் தெரியக்கூடியதொன்று. ஒளி வழிகாட்டுகிறது, எச்சரிக்கிறது, தன்னிடம் கவர்ந்நதிழுக்கிறது. உப்பு அமைதியாகத் தன் பணிகளை செய்கிறது. ஒளி துணிவுடன் ஒளிர்கிறது. உப்பும், ஒளியும் நமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை எடுத்துரைக்கின்றன. நாம் நமக்குள்ளே

நற்குணங்களை பாதுகாத்து, வழ்வின் பாதையை ஒளிர்வித்து, கிறிஸ்துவின் அன்பால் மற்றவரின் வாழ்விற்கு சுவையூட்டுவோராக, நமது ஒளியால் மக்கள் கிறிஸ்துவின் பாதையைக் கண்டுணரச் செய்வோராகத் திகழ்வோமாக.

**4. ஒளி முதலில் கிறிஸ்துவுக்கே உரியது:**

நண்பர்களே இன்று கிறிஸ்து நமக்கு ''உலகிறகு ஒளி'' நீங்கள் என்பதற்கு ஒப்பானதொன்றைக் கூறுகிறார். முதலில் அது கேட்பதற்கு எளிதான ஒன்றாக இருக்கலாம். சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் அதைக் குறித்து நாம் நிதானமாக நிறத்தி தியானிக்கும் போது அது நம்மை ஆச்சரியத்தில மூழ்கச்செய்யும். புதிய ஏற்பாட்டில் ''உலகின் ஒளி: என்ற சொற்றொடர் இயேசுவுக்கே உரியதாக இருந்தது. தூய யோவான் நற்செய்தியில் ''நானே உலகின் ஒளி (8:12)'' என்றும் ''நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்'' (12:46) என்றும் கூறியிருக்கிறார்.

அன்னை மரியாவும் யோசேப்புவும் கூட இதை குழந்தை இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணிக்கும் போது இச்செய்தியைக் கேட்டனர். ஆலயத்தில் இருந்த சிமியோன் குழந்தையைக் கையிலேந்தி ''இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி'' என பறைசாற்றினார். இயேசுவின் முன்னோடியும் பெரிய இறைவாக்கினருமான திருமுழுக்கு யோவானும் ''தாம் ஒளியானவர் அல்ல மாறாக அவ்வெரியைக் குறித்து சான்றுப் பகர வந்தவர்'' என்றுக் கூறுகிறார்.

இப்போது இயேசு நம் பக்கம் திரும்பி ''உலகிற்கு ஒளி நீங்கள்'' என்கிறார். இதைக் குறித்து சற்று சிந்திப்போம். இது காதுக்கு இனிமையான சுகமான எண்ண அலை மட்டுமல்ல. இது நமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு, இது நம் மீது சுமத்தப்பட்ட கடமை, இது நமது மாண்பு.

**5. ஒளிாகத் திகழ்ந்திட நமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு:**

இவ்வழைப்பு நமது அன்றாட வாழ்வில் எவ்வாறுப் பார்க்கப்பட வேண்டும் என்பதைக் குறித்துப் புனித பவுல் நமக்கு உதவிக்கு வருகிறார். அவர் பிலிப்பியருக்கு எழுதிய மடலில் ''எதை செய்தாலும் முணுமுணுக்காமல். பொறாமை போட்டி மனப்பான்மையோடு செய்யாமல், உள்ளத் தூய்மையோடு கடவுளின் பிள்ளைகளுக்குரிய நிலையில் தவறிழைக்காமல் நற்செய்தியை அறிவித்து இந்தக் கெட்டுப் போனத் தலைமுறையினர் மத்தியில் நீஙகள் இவ்வுலகில் ஒளிரும் விளக்காகத் திகழ வேண்டும்'' என்று எழுதுகிறார்.

முற்காலத்தின் கடலோடிகளைக் குறித்து சிந்திப்போம். அவர்கள் கடலில் பயணிக்கும் போது விண்மீன்களே அவர்களது வழிகாட்டிகள். அவை இல்லை என்றால் அவர்கள் தொலைந்து விடுவார்கள். பவல் ''நாமும உலகில் அத்தகைய வழிகாட்டும் விண்மீன்களாகத் திகழ வேண்டும் என்கிறார். அதிலும் சிறப்பாக சரியான வழிகாட்டல்

இல்லாத குழப்பமான சூழலில், திசைதெரியாது தவிக்கும் தருணங்களில் நாம் வழிகாட்டிகளாகத் திகழ்வோம். அப்போது நம் வாழ்வை உற்று நோக்கும் மக்கள் "இதுவே கடவுளின் அன்பு செயலாற்றும் வழி இந்தப் பாதையே நம்பிக்கைக்கும், அமைதிக்குமான பாதை" என்றுக் கூறுவர்.

இன்று நம் மத்தியில் இருக்கும் குழப்பங்களுக்கு அளவே இல்லை. மக்கள் தாங்கள் செல்ல வேண்டிய பாதையைத் தவறவிட்டு விட்டு செல்லும் வழி அறியாதுத் திகைக்கிறார்கள். இத்தகையோருக்கு வழிகாட்டும் ஒரு கடமையை இறைவன் நமக்களித்துள்ளார். அவர்களளுக்கு வழிகாட்டும் ஒளியாக நாம் திகழ வேண்டும்.

6 வழிகாட்டுதல் என்பதற்கான நவீனக் கால விளக்கம்:

தற்போது நான் இப்போதைய உதாரணத்தின் வழியாக விளக்கப் போகிறேன். இரவு வேளைகளில் பணிகள் மேற்கொள்ளப்படும் சாலைகளில் பல இடங்களில் நாம் சென்றுவிடா வண்ணம் தடுப்பை ஏற்படுத்தும் சங்கிலிகள், அதில் பொருத்தப்பட்டுள்ள ஒளிவீசும் விளக்குகள், நம்மை வழிநடத்த வரும் பல வழிகாட்டிகளான பதாகைகள் அவற்றில் உள்ள வாசகங்களான மெதுவாகச் செல்லவும்", எச்சரிக்கை, இந்த வழியாக அல்ல அந்த மாற்று வழியாக செல்லவும் போன்றவை நாம் பத்திரமாக அவ்வழிகளைக் கடந்துச் செல்ல உதவுகின்றன.

கிறிஸ்துவர்களாகிய நாம செய்ய வேண்டியதும் இத்தகையப் பணிகளையே. நமது செயல்பாடுகளால், நமது வாக்கால், வாழ்வால், நாம் வழிகாட்டும் ஒளியாகத் திகழவேண்டும். தவறான பாதையில் செல்வோருக்கு "நீங்கள் இந்த வழியில் நடந்தால் அது உங்கள் வாழ்விற்க ஊறு விளைவிக்கும். ஆனால் மாற்று வழி ஒன்று உண்டு அதுவே "இறைவன் காட்டும் வழி" என்றுக் கூறி அவர்களது பாதையை மாற்ற முற்பட வேண்டும்.

இயேசுவசின் அழைப்பு எதார்த்தமானது அது மகிழ்ச்சியளிக்கக் கூடியது. ஆனால் சில கிறிஸ்துவர்கள் தங்கள் வாழ்வை சிறிய மினுமினுக்கும வழியாகவே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும் எதற்கும் முணுமுணுத்துக் கொண்டு "நாம் நிச்சயம் ஆலயம் செல்ல வேண்டுமா?" "நாம் கட்டாயம் செபிக்க வேண்டுமா?" என்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது ஒளியானது மக்கள் முன் அதிகமாக ஒளியைக் காட்டாது மங்கலாகவே எரிந்துக் கொண்டிருக்கும்.

7 இறைவன் முன் சுரொளிவிட்டு ஒளிர்க:

இயேசு நம்மை பெரிதாக சுடர்விட்டு ஒளிர அழைக்கிறார். இது நம் இதயங்களுக்கு வெம்மையளிக்க. மகிழ்ச்சியூட்ட, மற்றவர்களை இவைன்பால ஈர்க்க உதவுகிறது.

மோசேவைக் குறித்து எண்ணிப் பார்ப்போம். அவர் சந்திப்புக் கூடாரத்திற்குள் நுழைந்த போது கடவுளை சந்தித்தார். அவர் இறை சநதிப்பிற்குப்பின் வெளியே வந்தபோது அரவது முகம் பிரகாசமாக ஒளிர்ந்தத. அவரது முகத்தைப் பார்க்கவும் மக்கள் அஞ்சினர். அந்த ஒளி அவருக்கு இறைவனை சந்தித்ததன் மூலமாகவே அவருக்குக் கிடைத்தது. நம்மிடமும் இயேசு இதையே எதிர்ப்பார்க்கிறார். நமது ஒளி நம்மிடமிருந்து வருவதில்லை ஆனால் நாம் இறைப்பிரசன்னத்தில் இருக்கும் போது அது நமக்குக் கிடைக்கிறது.

ஆனால் நமது ஒளி சில சமயங்களீல் மறைந்தும் மங்கியும் விடுகிறது. நாம் இரவு நேரங்களிவல் ஒளி சிந்தும் கடிகாரங்களைப் பார்த்திருப்போம். இரவில் அவற்றிலிருந்து வரும் ஒளி மிக அதிகயாக இருக்கும். ஆனால் போகப் போக சில மணிநேரத்தில் அந்த ஒளி மங்கி விடுவதைக் காண்கிறோம். அதை நாம் மீண்டும் எப்படி ஒளியேற்றுகிறோம்? நாம் அருகிலுள்ள மின் விளக்கை ஏற்றும் போது அந்த கடிகாரம் மீண்டும் ஒளிர்கிறது.

நம்மில் நிகழ்வதும் இதுவே. நமது ஒளி மங்கும போது நமது விசுவாசம் தளர்ச்சியடையும் போது நாம் உடனே இறைவன்பால் திரும்ப வேண்டும். அவரது பிரசன்னத்தில் நாம் சற்று நேரம் செலவழிப்போம். அவர் நம்மில் ஒளிர்ந்திட அவரை நம்மில் அழைப்போம். நாம் மீண்டும் ஒளியால் நிரம்பி பிரகாசிப்போம். நமது மகிழ்ச்சி நம்முள் மீண்டும் வந்து தங்கிவிடும்.

**8. இறுதி சிறுகதை - சிறிய செயல்பாடுகள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும்:**

நான் ஒரு சிறு கதையுடன் இப்பகுதியை நிறைவு செய்ய விரும்புகிறேன். ஒரு பெண் ஒரு சிறுவர்களுக்கான மருத்துவ மனையில் தன்னார்வத் தொண்டாற்றி வந்தார். அவளிடம் இருந்ததெல்லாம் முகத்தில் எப்போதும் பூக்கும் புன்னகையும் அவள் பயன்படுத்திய மென்மையான வார்த்தைகளுமே தவிர வேறெதுவும் இல்லை. ஆனால் அவள் வலியோடும் அது தந்த பயத்தோடும் வாழந்த சிறுவர் மத்தியீல் அவள் நம்பிக்கையையூட்டி வந்தாள். ஒரு சிறுமி அவளிடம் ஒருநாள் ”உங்கள் புன்னகை நாங்கள் எங்களை அச்சுறுத்தும் அனைத்திற்கும் இடையில் பத்திரமாக இருக்கும் உணர்வைத் தந்ததுு என்று அவளைப் பாராட்டிக் கூறினாள்.

இதைத்தான் நம்மிடம் இயேசு கேட்கிறார். நாம ஒளியால் நிரம்பி ஒளிர வேண்டும். நமது ஒளியால் உலகின் மூலை முடுக்குகள் அனைத்தும் கடவுளின் அன்பு என்னும் ஒளியால் நிறைந்திட வேண்டும்.

9. நாம் செயலபட விடுக்கப்படும் அழைப்பு:

இயேசு ”உலகிற்கு நீங்கள் ஒளியாக இருக்கிறீர்கள்” என்கிறார். அவ்வாறு நாம் எப்போதா மட்டுமோ அல்லது முக்கிய நாட்களிலோ மட்டுமல்ல மாறாக நாம் எப்போதும் மகிழ்ச்சியால் ஒளிர வேண்டும். துணிவோடும், உற்சாகத்தோடும ஒளிர வேண்டும். விசுவாசத்துடன் ஒளிர வேண்டும். உங்கள் வாழ்வ்ன் வாயிலாக மக்கள் இறைவனை உங்களில் காண வேண்டும்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள் சிறியதொரு வெளிச்சமும் -- அல்லது சிறியதொரு துளி உப்பும் வாழ்வில் பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வர இயலும். உங்களது சிறிய அன்பினாலான செயலகள் உஙகளது கனிவான சிறிய செயல்களும் மற்றவரின் வாழ்வை மாற்றுவதாக அமையும்.

எனவே நாம் இங்கிருந்துப் போகும் போது இவ்வுலகிற்கு உப்பாக ஒளியாக திரும்புவோம் - ஆமென்.